ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
தொலைபேசி : 044– 25670769
நிகரி : 25675849
இணையதளம் : www.tnrd.gov.in

**கடிதம் (1D ) எண். 518, நாள் 7.9.2009**

அனுப்புநர்
திரு க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நாகப்பட்டினம் மாவட்டம்,
நாகப்பட்டினம்.

அய்யா,

பொருள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2009–10–ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வரையறுக்கப்பட்ட நிதியில் நடைபாலங்கள், தாம்போகி பாலங்கள் மற்றும் உயர்மட்ட பாலப் பணிகளை எடுத்துச் செய்ய சிறப்பு அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 61, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.7.2009.
2. அரசாணை (நிலை) எண். 90, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.8.2009.
3. திரு.எஸ்.கே.வேதரத்தினம், சட்டமன்ற உறுப்பினர், வேதாரண்யம் தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம் அவர்களின் கடித நாள் 1.9.2009.

-----

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.கே. வேதரத்தினம் அவர்கள் பார்வை 3ல் உள்ள தனது கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், கடைமடை பகுதியாக உள்ள காரணத்தால் சாலைகளில் ஏராளமான ஆறுகளும் வாய்க்கால்களும் குறுக்கிடுவதால், மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளிலிருந்து மக்கள் தங்கள் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளதால் வாய்க்கால், ஆறுகள் குறுக்கே நடைபாலங்கள், தாம்போகி பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள் என கட்ட வேண்டிய நிலை உள்ளதால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான வரையறுக்கப்படாத நிதியில் பெருமளவு நிதியை பாலங்களுக்காக ஒதுக்கீடு செய்த போதிலும் தேவை அதிகமாக இருப்பதால் வரையறுக்கப்பட்ட கட்டாய பணிகளுக்காக தேர்வு செய்யப்பட்ட பட்டியலில் பாலப்பணிகளையும் சேர்க்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. திரு.எஸ்.கே. வேதரத்தினம், வேதாரண்யம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலனை செய்தது. அதன்படி நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில், வாய்க்கால், ஆறுகள் குறுக்கே நடைபாலங்கள், தாம்போகி பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள் கட்ட வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து எடுத்துச் செய்ய சிறப்பு அனுமதி வழங்க அரசு முடிவு செய்து, வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து நடைபாலங்கள், தாம்போகி பாலங்கள் மற்றும் உயர்மட்ட பாலங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்ய நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிறப்பு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
திரு.எஸ்.கே. வேதரத்தினம்,
சட்டமன்ற உறுப்பினர்,
வேதாரண்யம் தொகுதி,
தேத்தாகுடி தெற்கு – 614 809
நாகப்பட்டினம் மாவட்டம்.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
பனகல் மாளிகை,
சென்னை–15.